**பாதஹேவாஹட்ட பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பாதஹேவாஹட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய வருமானக் கூற்றுக்களை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,961,107 இற்கான நிலுவை நீர் கட்டண மீதியில் பழையான முறையில் பில் போடப்பட்ட ரூபா 1,123,123 இற்கான அறவிடப்படாத மீதிகள் காணப்படுவதனால், அந்த தொகையால் நடைமுறை சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை, அத்துடன் மீளாய்வாண்டின்

போது நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 3,031,378 பெறுமதியுடைய கட்டடங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் காணப்பட்ட ரூபா 97,000 தொகை பெறுமதியான கை டிரக்டர் வண்டி மற்றும் ரூபா 72,850 பெறுமதியான 11 குப்பை அள்ளும் வண்டிகள், தொடர்புடைய கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் அதே தொகையில் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கு குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) சபையினால் வைப்புக்கள் என பெற்றுக் கொண்டு பேணப்பட்டுவரும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கில் காணப்பட்ட ரூபா 389,684 இற்கான காசு மீதி நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 55,400 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) நிதிக் கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றின் மீதிகள், குறிப்பிட்ட கணக்குகளுடன் பரிசோதனை மேற்கொண்ட போது, வருட ஆரம்பத்தில் காசு மீதி இறுதியிலுள்ள காசு மீதி மற்றும் செயற்பாட்டு மிகையின் கூட்டுத்தொகை இடையே ரூபா 5,878,438 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் போது முதலீட்டு செயற்பாடுகளின் மூலம் உற்பத்தியான காசுப் பாய்ச்சலின் கீழ் காட்டப்பட வேண்டிய இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களின் முதலீடுகள் மற்றும் மோட்டார் வாகன விற்பனவு மூலம் கிடைத்திருந்த ரூபா 10,380,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 86,415 தொகை செலுத்த வேண்டிய வைப்புக்களின் பெறுமதியில் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2003 ஆண்டு முதல் 2008 ஆண்டு வரை காலம் தொடர்பாக அரசாங்க பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டுள்ள ரூபா 3,112,404 இற்கான நிர்மாண வேலை கடன் பட்டோர் மீளாய்வாண்டின் போதும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,615,001 ஆக காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம், அக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 19,789,224 ஆக காணப்பட்டமையால் ரூபா 174,223 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதிகள் பட்டோலையின் கூட்டுத்தொகை ரூபா 15,378,174 எனினும் அதனை ரூபா 15,392,974 கணக்குகளில் காட்டப்பட்டிருந்தமையால் அந்த பட்டோலையின் கூட்டுத்தொகை ரூபா 14,800 தொகையொன்று அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

---------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,983,576 ஆக காணப்பட்டது. அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 16,479,399 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,311,532 ஆகும்.

1.3.5 கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை

------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 3,954,058 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது.

1.3.6 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 | 2006 ஆண்டின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்ட பகுதிகளை இணங்கண்டு வீதவரி விதிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | |
| (i) விதி 180 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திர கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) விதி 177 | ரூபா 1,359,850 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு தொடர்பாக விதிகளின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடு கடைபிடித்திருக்கவில்லை. |
| (iii) விதி 212 | ரூபா 2,213,600 தொகை பெறுமதியான நீர் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள், இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 880(1) | பணம் மற்றும் களஞ்சியத்திற்கு பொறுப்பாக கடமையாற்றும் 17 அலுவலர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்று நிருபம் | சபைக்கு சொந்த 13 மறைக்கப்பட்ட கடைகள் மற்றும் 07 திறந்த நிலையில் காணப்படும் கடைகளில் இருந்து 2004 பெறுமதி மதிப்பீட்டின் பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் பழைய பெறுமதி மதிப்பீட்டின் மீது 2008 ஆண்டின் போதும் புது உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவை அத்தியாயம் XXIV பிரிவு 4.4 மற்றும் 4.5 | இரண்டு அலுவலர்களின் மற்றும் மூன்று ஊழியர்களிடம் நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய, ரூபா 36,410 கடன் மீதி அறவிடப் படாமல் காணப்பட்ட காலவீச்சு 02 வருடம் முதல் 07 வரை காணப்படினும் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,874,187 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,276,200 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 11,597,987 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-----------------------------

2.2.1 வீதவரி

----------

வீதவரி அறவீடு செய்வதற்காக முறையான செயல்முறை ஒன்று கடைபிடிக்கப்படாமையால் 2013 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 5,544,819 இற்கான மீதி ரூபா 6,154,106 வரை அதிகரித்திருந்ததுடன், அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதி வரை மேலும் ரூபா 3,325,723 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.2 வாடகை

-----------

சபைக்கு சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,045,702 இற்கான வாடகையினை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறையொன்று மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.3 நீர்க் கட்டணம்

---------------------

(அ) நீர் நுகர்வோர் எண்ணிக்கை 3400 எனினும், 2611 நீர் மாணிகள் மாத்திரம் பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) ஒழுங்கு முறைப்படி நீர்க் கட்டணம் அறவிடப்படாமையால் 2013 ஜனவரி 01 திகதியில் காணப்பட்ட மீதி ரூபா 228,146 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 8,960,107 வரை நூற்றிற்கு 30 இனால் அதிகரித்திருந்தது. இம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 7,520,288 இற்கான மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

--------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 8,459,824 ஆக காணப்பட்டது. அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 4,542,080 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 2012 மற்றும் 2013 ஆண்டின் போது அங்கிகாரம் அற்ற சுமார் 100 நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட 39 ஊழியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் நாளாந்த அடிப்படையில் 30 ஊழியர்கள் மற்றும் படியின் அடிப்படையில் 12 ஊழியர்களும் கடமையில் ஈடுபடுத்திய காரணத்தினால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 6,236,828 இற்கான தொகையொன்று சம்பளங்கள் மற்றும் படிகளாக செலவிடப்பட்டிருந்தன.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொலபிஸ்ஸ பகுதியில் 08 கிராமங்களை சேர்ந்த சுமார் 900 குடிசனத்திற்கு நீர் வழங்கும் நோக்கில் ரூபா 500,903 தொகையொன்று செலவிடப்பட்டு அமுல் நடத்தப்பட்ட கொலபிஸ்ஸ நீர் திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு போதியளவு நீர் வழங்குவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) கலஹ நூலகக் கட்டடத்தின் மேல் மாடியில் 03 கடைகள் நிர்மாணிப்பதற்கான தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்காத போதும் ஒரு கடை அங்கிகாரம் இன்றி ஒரு

நபரினால் கைப்பற்றப்பட்டிருந்தது. அந்த நபரை அகற்றுவதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன், மீதியான 02 கடைகளின் வேலையும் பூர்த்தி செய்யாமல் கிடைக்க வேண்டியிருந்த வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளது.

(இ) மொரகொல்ல பல்கரும கட்டடத்தின் ரூபா 643,656 இற்கான செலவில் வேலை பூர்த்தி செய்திருந்த போதும், அதன் கீழ் மாடியில் 05 கடைகள் இது வரை வாடகைக்கு வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு பௌதீக வளங்கள்

---------------------------------------------------------------------------------------------------

ரூபா 300,000 தொகையொன்று செலவிடப்பட்டு கொங்கிரீட் தூண்கள் மீது கொங்கிரீட் தட்டுகள் போடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த நுகலியத்த பொதுசன மண்டபத்தினை பயன்படுத்துவதற்காக அவற்றின் சுவர்கள், யன்னல்கள் மற்றும் கதவுகள் என்பன பொருத்தப்பட வேண்டிக் காணப்பட்ட போதும் அவ்விடயங்கள் 2014 ஆண்டின் போதேனும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் தற்போது இந்த கட்டடம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மொரகல்ல பலகரும கட்டடங்கள் ரூபா 643,656 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும, பரிசோதனை மேற் கொள்ளப்பட்ட கட்டடத்தின் மேல்மாடியில் மலசல கூட வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது சபையின் 10 நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது ரூபா 137,729 இற்கான தொகையொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என வெளிப்படத்தப்பட்டது.

(இ) எஸ்கவேடர் இயந்திரத்தின் மண் வெட்டுதல் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது, குறிப்பிட்ட ரேட் தொகைக்கு கூடுதலான கூறுவிலை ஏற்படுத்தி, 08 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,136,066 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டின் போது ரூபா 400,000 இற்கான செலவில் மண்வெட்டி தயாரிக்கப்பட்டிருந்த நீலவல ஹெவன்மடித்த பாதையின் ஆரம்பத்தில் காணப்படும் மிகவும் பள்ளமான பகுதிக்கு பள்ளமான தன்மையை குறைப்பதற்காக கொங்கிரீட் போடுவதன் மூலம் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு மாற்ற முடியும் எனினும், அதனை 2014 ஜூலை 31 கணக்காய்வு திகதி வரை தயாரித்திருக்கவில்லை.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

------------------------------------------------------------------------

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

----------------------------

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 03 வருமான விடயங்களில் நூற்றிற்கு 21 முதல் நூற்றிற்கு 50 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 31 முதல் நூற்றிற்கு 150 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 04 வருமான தலைப்புக்களை சேர்ந்த 07 துணை விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,480,491 இற்கான வருமானத்தின் அறவீடு செய்யும் சதவீதம் நூற்றிற்கு 0 ஆகும்.

(இ) 04 வருமான தலைப்புகளை சேர்ந்த 05 துணை விடயங்களுக்காக பாதீடு செய்யாமல் ரூபா 580,284 இற்கான வருமானத்தினை உழைத்திருந்தது.

4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

---

2013 திசெம்பர் 31 திகதி வரை 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை.

4.3 கொள்வனவுத் திட்டம்

---

சபையின் கொள்வனவு மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பாக கொள்வனவு திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடத்துதல்

---

நிறுவனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைத்திருக்கவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

---

நிறுவனத்தில் போதியளவு அகக்கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) அகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்

(ஊ) இருப்பு கட்டுப்பாடு